★ கல்கத்தா நீதிமன்றம் சிரிக்கிறது ! ★

Phone No. 4502 — விலை அணா ஒன்று

Regd. No. M. 5458 — [இலங்கை 10 சதம்]

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. — MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (23—11—49) வெளியூர் (24—11—49) [இதழ் 98

சர்க்காரைக் குறை கூறுவது எவ்வகையில் குற்றமாகும்?

—:0:—

நல்லாட்சி விழைவோரை, நாம் யார், தடுத்து நிறுத்த ?

யதேச்சாதிகார ஆட்சியன்றோ, அடிப்படை யுரிமை யளிக்க மறுக்கும்!

துண்டறிக்கை வழங்குவது சட்டப்படி தவறல்லவே

"இன்றைய சர்க்காரின் அமைப்பையும் போக்கையும் குறைகூறி மாற்றம் விழையும் விஷயங்கள் அடங்கிய துண்டறிக்கைகளை வைத்திருப்பதோ, விநியோகிப்பதோ, சுவற்றில் ஒட்டுவதோ நாச வேலைகளாகமாட்டா.

"இத்தகைய துண்டறிக்கைகள் இன்றைய சர்க்காரின் போக்கை விரும்பவில்லையென்பதையும், எனவே, அது அகல வேண்டுமென்ற விழைவையும் மட்டுமே எடுத்துக் காட்டுகின்றன. தவருகவோ, சரியாகவோ இதுபோன்று எடுத்துக்கூற 'தனிப்பட்ட குடி மகனுக்கு அல்லது பலர் சேர்ந்த குழுவுக்கு ஜீவாதார உரிமையிருக்கிறது.

"நடப்பிலுள்ள நிர்வாகத்தைக் குறை கூறினல், அதைக் கடியக் கூடிய யதேச்சாதிகார சர்க்காரின் கீழா நாம் வாழ்கிறேம், இல்லையே !"

சர்க்காரைக் குறை கூறுவதையே தங்கள் திட்டமாக வைத்திருக்கின்றன சில கட்சிகள், அவற்றுளொன்றின் கூற்ருக இருக்கலாம் மேற்கண்டது என நினைப்பர் சிலர்! தேசிய சர்க்காரை பலாத்காரமாகக் கவிழ்த்துவிட்டு, மாற்று சர்க்கார் நிறுவப் பாடுபடுகின்றனர் சிலர், அவர்கள் கூறியதாகவுமிருக்கலாமென்பர் சிலர்! வெளிநாடுகளிலிருந்து 'தரகு' பெற்றுக்கொண்டு நாட்டில் சீர்கேட்டையுண்டாக்க வேலை செய்கின்றது ஒரு கூட்டம். அதன் பிரகடனமாகவுமிருக்குமென்பர் சிலர்.

இல்லை; சர்க்காரின் எதிரிகளாக, பகைவர்களாகக் கருதப்படுகிறர்களே அவர்களின் கூற்றல்ல இது! அரசியல் [illegible]ங்கள் பெற, பொது மக்களின் ஆத்திரத்தைப் பயன்படுத்திக்கொள்ள முனைந்து வேலை செய்கின்றனரென்று கூறப்படுகிறதே, அப்படிப்பட்டவர்கள் தரும் விளக்கமல்ல இது. நீதியின்-நியாயத்தின்—நேர்மையின் அறைகூவல் இது. நீதி மன்றம்தந்த தீர்ப்பு, பன்முறை சீர்தூக்கிப் பார்த்து, மன்றத்தமர்ந்த நீதிபதி வெளியிட்ட தேர்ந்த கருத்து!

"காங்கிரஸ் சர்க்கார் ஒழிக," "காங்கிரஸ் சர்க்காரின் தவருன போக்கால் மக்கள் மனமுடைந்தனர்" என்ன போன்ற சொற்றெடர்கள் கொண்ட துண்டறிகைகளைக் கையில் வைத்திருந்தனர், சுவற்றில் ஒட்டினர் என்பதாகக் குற்றஞ்சாட்டி கல்கத்தா போலீஸ் மூன்று நபர்களை, நீதிபதி முனனிலையில் கொண்டு நிறுத்தியது. நீதிபதி, வழக்கின் தன்மையை ஆய்ந்தார். அவர் தந்த தீர்ப்பே, மேலே காட்டப்பட்டிருக்கும் கருத்துளிகள்.

கல்கத்தா அடிஷனல் பிரிசிடென்சி மாஜிஸ்ட்ரேட் தோழர் பி. முகர்ஜி கடந்த 21-ந் தேதியன்று இத்தீர்ப்பை வழங்கி, மூவரையும் விடுதலை செய்தார். மேற்கு வங்கப்பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் குற்றஞ்சாட்டி, அவர்களை பிடித்து வந்திருந்த போலீஸ்

[இரண்டாம் பக்கம் பார்க்க]

ஏகாதிபத்திய நுகத்தடியில் நீண்ட நாளிராது இந்தியா

'சமதர்ம மக்களாட்சி ஒரு நாள் மலரப்போவது உறுதி'

—:(0):—

சீனத் தலைவர் மோசிதுங் செய்தி

இந்தியர் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் பி. டி. ரணதிவுக்கு சீனம் கம்யூனிஸ்ட் தலைவர் மோசிதுங் அனுப்பிவைத்திருப்பதாகக் கூறப்படும் தந்தியில் அடியிற் கண்டபடி குறிப்பிட்டுள்ளாரெனத் தெரிகிறது.

"ஏகாதிபத்தியத்தினுடையவும், அதன் பாதுகாவலருடையவும் நுகத்தில் (ஆதிக்கத்தில்) மேலும் இந்தியா நீண்ட நாளைக்கு இருக்கப் போவதில்லை. சமதர்ம மக்களாட்சிகள் குடும்பத்தின் ஒரு உறுப்பினராக இந்தியா ஒரு நாளைக்குத் திகழப் போவது உறுதி."

சீனவில் மக்கள் சர்க்கார் நிறுவனமானதை யொட்டி, இந்தியர் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திக்கு மோசிதுங் அனுப்பிய பதிலே இது.

தோழர் சரத் சந்திரபோஸுக்கும் மோசிதுங் பதில் அனுப்பியுள்ளாரென்று தெரிகிறது.

"நல்ல பொருளை" நாசமாக்கலாமா ?

கைப்பற்றிய கள்ளச் சாராயத்தைக் குடித்த போலீஸ் விளக்கம் !

கிழக்குப் பஞ்சாப் மதுவிலக்கு அமுல் செய்யும் போலீசார், தாங்கள் கைப்பற்றிய கள்ளச் சாராயங்களைப் பெரும்பாலும் தாங்களே குடித்திருக்கின்றனர். அவைகளை நாசப்படுத்திவிடுகிறேமென்றுகூறிக் கொண்டே அவர்களே பயன்படுத்தி வந்திருக்கின்றனர். இது ஒழுங்கா, முறையாவென்று கேட்டதற்கு நல்ல பொருள்' ஒன்றை நாசப்படுத்தத் தாங்கள் விரும்பவில்லை யென்று விளக்கம்கொடுத்தனர். இத்தகவலை கிழக்குப் பஞ்சாப் உறுப்பினர் சர்தார் போபின்டர் சிங்மாண் 21-ந் தேதியன்று அரசியலமைப்பு சபையில் வெளியிட்டார்.

மதுவிலக்குக் கொள்கையை மக்கள் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில், மது விலக்கை அவ்வளவு எளிதில் அமுல் செய்து விட முடியாதென அவர் மேலுங் குறிப்பிட்டார்.

மாதர் போலீஸ் படை இப்போதில்லை

மாதர் போலீஸ் நியமிக்கும் பிரச்சினையை சென்னை சர்க்கார் மிகவும் கவனமாக ஆலோசித்தனரென்றும், தற்போதைக்கு அத்திட்டத்தை ஒத்திப்போடுவதென்ற முடிவுக்கு வந்துள்ளனரென்றும் பொது சுகாதார மந்திரி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், தோழர் எம். என். [illegible] கேள்விக்குப் பதிலளிக்கையில் சட்டசபையில் குறிப்பிட்டார். போலீஸ் பணிக்கு மாதர் தகுதியுடையவர்களல்லர் என்ற காரணத்திற்காக அது ஒத்திப்போடப்படவில்லையென்றும், பொருளாதார நிலையுள்ளிட்ட பல்வேறு காரணங்களாலேயே இப்படிச் செய்ய வேண்டியதாயிற்றென்றும் அவர் தெரிவித்தார்.

சோம்பேறிகளுக்குப் பரிசு!

"காங்கிரஸ் அரசியலார் கடைப்பிடிக்கும் ஜமீன்தாரி ஒழிப்புக் கொள்கையால் சோம்பித்திரியும் பணக்கார வர்க்கமே அதிகரிக்கும். முன்பெல்லாம் சுரண்டியதற்குப் பரிசளிப்பதுபோலவே யாகும் ஜமீன்தார்களுக்கு நஷ்டஈடு தருவது."

—ஜெயப்பிரகாஷ்நாராயண்

கவர்னர்—பிரதமர் காட்டும் வழி !

உணவுச் சிக்கனமுறை இயக்கத்தை யொட்டி, கிழக்குப்பஞ்சாப் கவர்னர் சர். சந்துலால் திரிவேடியும், பிரதமர் டாக்டர் கோபிசாந்த் பர்காவாவும் வாரத்தில் ஒரு நாள் ரேஷனை வாங்காதுவிட்டுவிடத் தீர்மானித்துவிட்டனராம்.

"பிச்சையெடுத்ததாம் பெருமாள்...?"

[illegible] கோவிலில் இருந்த இரும்பு உண்டியல் பெட்டி, கடந்த 15-ந் தேதியன்று இரவு உடைக்கப்பெற்றிருந்ததாகவும், உண்டியல் தொகை களவாடப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. இது சம்பந்தமாக சென்னையைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளாரெனத் தெரிகிறது.

கம்யூனிசத்தையெதிர்த்துத் 'திட்டம் போட்ட' போர்!

ஆசியநாடுகளைக் குல்லாய்ப் போட்டு மடக்க சூழ்ச்சி!

கம்யூனிஸ்ட் எதிர்ப்பியக்கத்தின் ஒரு பகுதியாக பல்வேறு ஆசிய நாடுகளுக்கும் பொருளாதாரம், மருத்துவம், கலை ஆகிய துறைகளில் அதிகப்படியான உதவி செய்வதென ஆஸ்ட்ரேலியாவும் இதர பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளும் திட்டமிட்டுள்ளன. இத் தகவலை "மெல்பர்ன் ஆர்கஸ்" (ஆஸ்ட்ரேலியா) பத்திரிகை நவம்பர் 20 ல் எழுதியுள்ளது. ஜனவரியில் இலங்கையில் ஆரம்பமாகும் காமன்வெல்த் மாநாட்டுக்குப் பிறகு மேற்படி அதிகப்படி உதவிகள் பற்றிய நிபந்தனைகள் அறிவிக்கப்படுமாம். இத்தகைய உதவிகளைப் பெருவாரியாகப் பெறவிருக்கும் நாடுகள் இந்தோனேஷியா, மலேயா, பர்மா, சையாம் இன்னும் இதர பிரிட்டிஷ் ஆதிக்கப் பிரதேசங்கள் ஆகியவை யெனத் தெரிகிறது.

கப்பலேற்றப்பட்டனர்

சிங்கப்பூரினின்றும் 1,000 பிரயாணிகளை யேற்றிக்கொண்டு, ஜலா என்ற கப்பல் 20-ந் தேதி மாலை சென்னை துறைமுகம் வந்தடைந்தது. இவர்களுள், 30 கம்யூனிஸ்டுகளும் அவர்கள் தம் குடும்பங்களும் அடங்குவர். மலேயா சர்க்கார் இவர்களை மலேயாவினின்றும் வெளியேற்றி யனுப்பியிருக்கிறது.

"கம்யூனிஸ்ட் நாச வேலையைத் தடுக்க மட்டுமே எங்களால் முடியும்"

கிளர்ச்சி செயும் மன நிலைக்குப் போலீஸ் மருத்துவம் போதாது !

கல்கத்தா கமிஷனர் கூறுகிருர்

கல்கத்தா நகரப் போலீஸ் கமிஷனர் தோழர் பி. என். சாட்டர்ஜி 21-ந் தேதி யன்று நிருபர்களிடையே பேசுகையில், கல்கத்தாவில் கம்யூனிஸ்ட் நடவடிக்கைகள் பெரிதும் அடக்கியொடுக்கப்பட்டுவிட்டனவென்றும், சட்டத்தை மீறி நடக்கும் சக்திகளை யெதிர்த்துப் போராடுவதில் நகரப் போலீஸ் வெற்றி பெற்றுவருகிறதென்றும் குறிப்பிட்டார்.

'சட்டம் — ஒழுங்கை மீற மக்கள் கூட்டத்தாரிடையேற்படும் மன நிலையைப் போலீசார் தடுத்து நிறுத்தமுடியாது. பத்திரிகைகளும் பொதுமக்களுமே அத்தகைய மருந்துவதனை மேற்கொள்ளவேண்டு' என்று கல்கத்தாபோலீஸ் கமிஷனர் மேலும் குறிப்பிட்டார்.

மாலை மணி

சென்னை 23—11—49 புதன்கிழமை

முயற்சி பலிக்குமா?

"மாணவர்கள் சமஸ்கிருதம் படிப்பது அவசியம். அல்லது சமஸ்கிருத இலக்கியங்களை ஆங்கிலத்திலாவது படிக்க வேண்டும். வாழ்க்கையின் அடிப்படையான மதிப்புகளை இவை எடுத்துக்காட்டுகின்றன,"

என்று தோழர் கே. எம். முன்ஷி காசிப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசும்போது குறிப்பிடுகிறார். இந்தக்கருத்தைத் தோழர் முன்ஷியும் அவரைச்சார்ந்த, வடவாரிய மொழியாகிய சமஸ்கிருதத்தைத் தாய்மொழியெனக் கொள்ளும் பிறரும், ஏற்றுக்கொள்வதிலே நமக்குக் கஷ்டமுமில்லை, நஷ்டமுமில்லை. ஆனால்,இதே கருத்தைப் பலப் படப்புகழ்ந்து கூறி, சென்னை மாகாணத்தில் சமஸ்கிருதம் நிலையான இடம் பெற்றிருக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி, பள்ளிப்பாடத் திட்டத்தில் சமஸ்கிருதத்திற்கு எந்த அளவுக்கு உயர்வுதர வேண்டும் என்பதையும் எடுத்து விளக்கி, "ஹிந்து" இதழ் துணைத்—தலையங்கம் தீட்டியிருக்கிறது என்றால், தென்னாட்டவரை—தீரத் திராவிடர்களை—தீந்தமிழ் மக்களை 'ஹிந்து" எவ்வளவு துச்சமாகக் கருதியிருக்கிறது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

"வாழ்க்கையின்அடிப்படையான மதிப்புகளை" சமஸ்கிருத இலக்கியங்கள்எடுத்துக்காட்டுகின்றனஎன்பது,அருமையானதாகவும், ஆச்சரியகரமானதாகவும், அதிசயிக்கத்தக்க விதமாகவும், வட இந்தியர்க்கும், வடவாரியர் வழியின் வந்ததாகக் கருதிக்கொண்டு தென்னாட்டில் ஆதிக்க வகுப்பினராக விளங்குவோர்க்கும் வேண்டுமானால் விளங்கலாமே யொழிய, தீந்தமிழ்த் திராவிட மக்களுக்கு ஒருபோதும் அப்படிப் படாது. சமஸ்கிருத இலக்கியங்களை விட, பன்மடங்கு சிறந்தனவாகவும், வாழ்க்கையின் இன்றியமையாதத் தேவையை நிறைவேற்றித் தருவனவாகவும், இயற்கையோடு இயைந்து நின்று இன்ப வாழ்வு பயப்பனவாகவும் அமைந்த **"வாழ்க்கையின் அடிப்படை மதிப்புகள்"** தமிழிலக்கியங்களில் ஏராளமாக இருக்கும் போது, தமிழர்களுக்கு—திராவிடர்களுக்குச் சமஸ்கிருதம் ஏன்? வட இந்தியர்க்கு வேண்டுமானால் சமஸ்கிருத இலக்கியக் கருத்துக்கள்—தமிழ் இலக்கியக் கருத்துக்கள் தெரியாத காரணத்தால—மிக இனிப்பாகத் தோன்றலாம்! ஆனால் தமிழர்க்கு சமஸ்கிருதத்தை—விட அறிவுக்கும்—வாழ்க்கைக்கும் ஏற்ற பொருத்தமான கருத்துக்கள் தாய் மொழிச் தமிழிலேயே இனிக்கும் போது, தமிழ் நாட்டிற்கு—திராவிடத்திற்குச் சமஸ்கிருதம் என்? நமக்கு அவசியமற்ற அந்த சமஸ்கிருதத்திற்குத்தான் 'லாலி' பாடி, தமிழகத்திலும், ஏனைய திராவிடப் பகுதிகளிலும் புகுத்த "ஹிந்து" இதழ் அரும்பாடு படுகிறது!

"சமஸ்கிருத இலக்கியங்கள் இல்லாமலிருந்தால் ராம் மோஹன்ராயோ, ராமகிருஷ்ண பரமஹம்ஸரோ, மாளவியாஜியோ, திலகரோ, காந்திஜியோ தோன்றியிருக்க முடியாது"

என்று தோழர் கே. எம் முன்ஷி சமஸ்கிருதத்தின் பெருமையைக் கூறி குதூகலிக்கிறார். அது வடநாட்டைப் பொறுத்தவரையில் உண்மையாக இருக்கலாம்! ஆனால், சமஸ்கிருதத்தின் அந்தத் துணையில்லாமலே, அவர்கள் எல்லோரையும் விட சிறந்து விளங்கும் திருவள்ளுவரைத் தமிழ் தந்திருக்கிறதே! ஈடும் எடுப்புமற்ற பல சங்கப் புலவர் பெருமக்களையும், அறிஞர் பெருமக்களையும், வீரர்களையும், வீராங்கனைகளையும், வள்ளல் பெருந்தகைகளையும், நுண் தொழில் வினைஞர்களையும் தமிழ் தந்திருக்கிறதே! தமிழகததில் சமஸ்கிருதம் குடியேறினதற்குப் பிறகுதானே, நாட்டின் எல்லா நலனும் குன்ற ஆரம்பித்தது! சமஸ்கிருத இலக்கியங்கள், தமிழகத்தில் சூழ்ச்சியால் நுழைக்கப்பட்டு, அவற்றின் வழி மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் தோன்ற ஆரம்பித்ததன் பிறகுதானே, தமிழ்ப் பெருங்குடி மக்களின் இன்ப வாழ்வு கருகி, வேதனைதரும் கற்பனை வாழ்வுமிகுந்துள்ளது! இந்த நிலையை மேலும் மேலும் காண விரும்புகின்றனர், "ஹிந்து"வும் அதன் இனத்தைச் சார்ந்தோரும்! இத்தகைய 'கெடுதலைகள்' தமிழகத்தினின்றும் என்று நீங்குமோ? ஏக்கம் மிகுகிறது!

செத்திருந்தும், தமிழனின்-திராவிடனின் இன்பவாழ்வைக் கெடுத்துக், கற்பனையுலகில் இருக்கச்செய்து, அறிவினை அடகு வைக்கச்செய்யும் சமஸ்கிருதம், எந்த விதத்திலும் தமிழர்க்குத்— திராவிடர்க்குத் தேவையில்லை! தமிழனுக்குத் தாய்மொழியாகிய தமிழும் அகில உலக மொழியாகிய ஆங்கிலமும் மட்டும் போதும்; வேறு மொழி எதுவும் கட்டாயமாகத் தேவையில்லை; வேறு எதுவும்இல்லாமலேயே இனிய வாழ்வு அவனால் நடத்த இயலும்! இப்படியிருக்க சமஸ்கிருதத்தையும், அதன் வழி வந்தஹிந்தியையும்தமிழோடும் ஆங்கிலத்தோடும் சோத்துத் கட்டாயமாகக் கற்றுக்கொள்ளும்நிலை பாடத்திட்டங்களிலேயும், ஆட்சிமுறையிலும்ஏற்பட வேண்டும் என்று தோழர் முன்ஷியும், "ஹிந்து" ஆசிரியரும் கூறுகிறார்கள் என்றால், அவர்களது பரம்பரைஉணர்வு எத்துணை அளவுக்குத் தலை தூக்கியிருக்கிறது என்பதைச் சிந்தியுங்கள்.

இந்தியா நம்பிக்கை மிகுந்த நாடாம்! இந்திய மக்கள் கடவுள் நம்பிக்கையில் ஊறிய இனத்தினராம்! பல்கலைக் கழகங்கள் இந்த அடிப்'படைகளைப் புறக்கணிக்கின்றனவாம்! புறக்கணிக்கும் வரையில் கலாசார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு தனிப்பலத்தைச் சிஷ்ருடிக்க அவற்றினால் முடியாதாம்! இப்படிக் கூறியுள்ளார் தோழர் கே. எம் முன்ஷியார் பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவில்! தன்நம்பிக்கையை விட்டுக், கடவுள் நம்பிக்கையில் நாளுக்குநாள் நாட்டம் மிக செலுத்த ஆரம்பித்த பிறகுதானே, இந்த நாட்டில் அல்லல்களும் பிறவும் மிகவாகத் தோன்றின. கடவுள் நம்பிக்கை மிகுந்திருந்த காலத்தில்தானே, பிறநாட்டுப் படையெடுப்புகள், அவை காரணமாகக் கொள்ளை,கொலை,சூறையாடுதல், தீயிடுதல், அடிமையாக்குதல் ஆகிய இவை, அளவுக்கு மீறி நடைபெற்றிருக்கின்றன. இவற்றையெல்லாம் தடுக்கக் கடவுள் நம்பிக்கை ஏதும் செய்யவில்லையே! மனிதனுக்குச் சிறிதளவு தன்னம்பிக்கை ஏற்பட்ட பிறகுதானே, இந்நாட்டு மனிதன் சிறிதளவு உரிமை உணர்ச்சியோடு வாழவும், தன்னிலையுயர்த்திக் கொள்ளவும் முடிகிறது. இவற்றையெல்லாம் கண்ட பிறகும், கடவுள் நம்பிக்கையைப் பல்கலைக் கழகங்கள் ஊட்ட வேண்டும் என்று தோழர் முன்ஷி கூறுகிறார் என்றால், ஏனோ தானோ தெரியவில்லை!

சமஸ்கிருத கலாசாரத்தை எங்ஙனம் தென்னாட்டுக் கலாசாரமாக கருத முடியும்! இரண்டும் ஒன்றல்லவே, வேறு வேறாயிற்றே! தென்னாட்டுக் கலாச்சாரத்தை அழித்து, ஆரிய கலாசாரமாகிய சமஸ்கிருத கலாசாரத்தை நிலையானதாக ஆக்க, முன்ஷியும் அவர் வழிச்சார்ந்து நிற்போருங் முயன்றுவருகின்றனர். சமஸ்கிருதத்திற்கு அகில இந்திய பல்கலைக்கழகம் ஒன்று காணவேண்டுமாம்! சமஸ்கிருதத்தைத் திராவிடத்தில்—தமிழகத்தில் நிலைநாட்ட உயர்நீதி மன்ற நீதிபதியிலிருந்து, நீர்த்துறைப் புரோகிதர்வரை முயலுகிறார்கள்! **முயற்சி பலிக்குமா?** பலிக்க விடப்போகிறீர்களா, ஏ, திராவிடப் பெருங்குடி மக்களே!

இந்தோனேஷியா

இந்தோனேஷிய குடியரசைச சேர்ந்த இரண்டு பெரும் அரசியல் கட்சிகளும் ஒன்பது சிறிய கட்சிகளும் ஹேக் மாநாட்டின் முடிவை ஏற்றுக்-கொண்டதாகவும், அதன்படி அடுத்த மாதம் இந்தோனேஷியா முழு சுதந்திரம் வாய்ந்த குடியரசாக விளங்கும் என்றும், அமைதியான சூழ் நிலை இருந்து வருவதாகவும் சொல்லப்படுகிறது. விரைவில் இந்தோனேஷியாவில் முழு அமைதியும், முழு சுதந்திரமும் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறோம்.

அறிக்கை

—— ——:0:——————

வ ஆ. வேலூரில் 20—11—49 ஞாயிற்றுக்கிழமையன்று, பெரியார் அவர்கள், பொதுக்கூட்டத்தில் பேசுகையில், கலகமும் குழப்பமும் ஏற்படும் விதமாக, யாரோ சிலர் நடந்துகொண்டிருப்பது கண்டு மிகவும் வருந்துகிறேன். பொதுவாழ்க்கையின் தூய்மையை மாய்க்கும் இத்தகைய மதியற்ற செயல், யாரால், எதற்காக, எப்படி மேற்கொள்ளப்படுவதானாலும், அந்தச் செயலை நான் முற்றிலும் வெறுப்பவன். கலகம் விளைவித்து, அதன்மூலம், யாரும், தங்கள் கொள்கைக்கும், கட்சிக்கும் உரம் தேடிக்கொள்ள முடியாது; அத்தகையோர் ஊறுதேடிக்கொள்பவரேயாவர்.

திராவிடர் கழகமும் — திராவிட முன்னேற்றக் கழகமும் மோதிக்கொள்வது, கழகத்தின் குறிக்கோள் வெற்றிபெறுவதற்குரிய வழியாகாது; மாறாக, மாற்றார்க்கும், அரசாங்கத்திற்கும் லாபம் தரும் செயலாக முடியும், என்பதை நான் வலியுறுத்திவந்திருக்கிறேன். இதை உணராத பொறுப்பற்ற சிலரின் செயலால்தான், பெரியாரின் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது என்றால் அது குறித்து நான் வருந்துகிறேன். கலகக்காரர்கள் யாராக இருப்பினும் அவர்களைக் கண்டிக்கிறேன்.

வேலூர் திராவிட முன்னேற்றக் கழகத்தாரை, அன்றைய சம்பவத்தைப் பற்றிய முழு உண்மைத் தகவல்களையும் எழுதியனுப்பும்படி வேண்டிக்கொண்டிருக்கிறேன். வேலூரிலிருந்து தகவல்கள் கிடைத்ததும் மேற்படி கலவரத்திற்குக் காரணஸ்தர்களாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் யாரேனும் இருப்பதாகத் தெரியவந்தால், அத்தகையவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி வேலூர் தி. மு. கழகத்தைக் கேட்டுக்கொள்ள திட்டமிட்டுள்ளேன். ஆர்வத்திற்கும், ஆத்திரத்திற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் பொதுவாழ்வுத் துறையில் அபாயக்குறிகள். தி. மு. கழகத்தில் அத்தகையவர்களுக்குச் சிறிதும் இடம் கிடையாது.

விபரம் தெரிந்த பிறகு அது குறித்துத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வேன். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் எப்பொழுதும் கண்ணியத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். கொள்கைக்காக நாம் இருக்கிறோம்; குரோதத்திற்காக அல்ல. வேலூர் கூட்டத்தில் கண்ணியமற்ற தன்மையில் நடந்துகொண்டவர்கள் முன்னேற்றக் கழகத்தவரல்லாத பிறரெனின், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அக்கண்ணியமற்றவர்களைக் கண்டிக்கிறேன்.

சி. என். அண்ணாதுரை,
பொதுச் செயலாளர்—தி. மு. கழகம்
22—11—49

'எகிப்து–சூடான் எப்படி; அப்படியே பாகிஸ்தான்–காஷ்மீர்'

பண்டித நேருவை இப்ராகிம் கான் தாக்குகிறார்

'எகிப்தும் சூடானும் எப்படி ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன, அப்படியே சார்ந்து வாழவேண்டியன காஷ்மீரும் பாகிஸ்தானும்' என்பதாக அஸாத்-காஷ்மீர் சர்க்கார் தலைவர் சர்தார் மகமது இப்ராகிம்கான் செய்ரோவில் கடந்த 20-ந் தேதி நிருபர்களிடைக் குறிப்பிட்டார்.

காஷ்மீர் தகராறில் ஐ. நா. கமிஷன மேற்கொண்ட மத்திய முயற்சிகளை யெல்லாம் பண்டித நேருவே கெடுத்து விட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். தலைவர் ட்ரூமன், தோழர் அட்லி செய்த சமரச முயற்சிகளை யெல்லாங் கூட, பொருத்தமற்ற பிரச்சினைகளைக் கொண்டு வற்புறுத்தி, பண்டித நேரு விலக்கி விட்டாரெனவும் அவர் குறிப்பிட்டார்.

உறவு உரம்பெற...!

இந்தியாவும் அமெரிக்காவும் ஒன்றையொன்றுசரியானபடி அறிந்து கொள்ளவும், இரு நாடுகளுக்கு மிடையே உள்ள அரசியல் ராஜிய வர்த்தக, நிதி உறவு போன்றவற்றையும் ஆராயவும் கலாசாரத் தொடர்பை விருத்திசெய்வது பற்றி ஆலோசிக்கவும் அடுத்த மாதம் 22 ம் தேதி டில்லி சர்வகலாசாலையில் இந்திய — அமெரிக்க மாநாடு நடைபெறும்.

இசைத் துறையிலும் ஏகபோக ஆட்சியா?

கர்நாடக இசைக்கல்லூரியில் சுயநலக் கும்பலின் ஆதிக்கம்

உரிமைக்குப் போராட வாரீர்!

இசைப்புலவர் தோழர் பி. டி. கிருஷ்ணமூர்த்தியின் அறிக்கை

சென்னை, நவ. 20—

சென்னை சங்கீத வித்வான் தோழர் பி. டி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சென்னை கர்நாடக இசைக் கல்லூரி பற்றிய தம் கருத்தை அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளார்கள். அவ்வறிக்கை வருமாறு:—

சென்னை கர்நாடக இசைக் கல்லூரி (சென்ட்ரல் 'காலேஜ் ஆப் கர்நாட்டிக் ம்யூஸிக்') இந்தக் காலேஜ் தொடங்க விளம்பரப்படுத்தியது கண்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால், இது முதலிலேயே பெரும் கிளர்ச்சிக்கிடையே சங்கீதத் துறையில் பயிற்சி இல்லாத அட்வகேட்டுகளும், "இந்து" ஆசிரியர் கே ஸ்ரீனிவாசன், எஸ். வெங்கடேஸ்வரன் ஐ. சி. எஸ், கம்ப இராமாயண பிரசங்கி, டி. கே சிதம்பரநாதர் போன்றவர்கள், தங்களுக்குத்தான் இதில் ஆலோசனை சொல்லும் உரிமை உண்டென்று வாதாடிப் பத்திரிகைகளில் கிளர்ச்சி செய்து, ஒருநாள் கர்நாடக சங்கீதத்தைப் பற்றி தலையங்கமும் 'ஹிந்து'ப் பத்திரிகையில் மகவும் காரசாரமாக வெளிவரச் செய்தார்கள்.

இந்த நிலைமையில், சங்கீத வித்வான் டைகர் வரதாச்சாரியாரும், செம்மங்குடி சீனிவாச அய்யரும் ஒருநாள் 'ஹிந்து'ப் பத்திரிகையில் கர்நாடக சங்கீத வளர்ச்சி பற்றி எழுதித் தங்களுக்கும் இதில் உரிமை உண்டென்று வாதித்திருந்ததாக அறிகிறேன்.

இதன் நடுப்பின், கல்வி மந்திரி பதவியிலிருந்து விலகிய தோழர் டி. எஸ் அவினாசிலிங்கம் அவர்களைத் தலைவராகக்கொண்ட கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அக்கமிட்டியில், பெரும் சங்கீத வித்வத் துறையில் சிறிதும் பழக்கமில்லாத அட்வகேட்டுகளையும் வேறு துறையில் பெரியமனிதர்கள் என்று சொல்பவர்களையுமே அதிகமாக நியமித்து, அதிலும் ஜாதி அவேசம் உடைய பார்ப்பனர்களையே மற்றைத்துறையிலும் சங்கீதத் துறையிலும் உள்ளவர்களையே பெரும்பான்மையாக நியமித்து இந்தக் கல்லூரிக்கு ஆலோசனை சொல்ல ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அன்றியும், பி. சாம்பமூர்த்தியென்னும் ஒரு அட்வகேட் ஐயரையே இதற்கு ஸ்பெஷல் ஆபீஸராக நியமித்து இவரைக் கொண்டே மற்றைக் காரியங்களைச் செய்யவும், கல்லூரிக்கு வாத்தியார்கள் வாங்கவும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இவரின் யோசனைச் சக்தியில் ஏதோ மர்மம் தனக்கு இருக்கிறதென்று சொல்லி பல விஷயங்களாகவே சென்னை யூனிவர்சிட்டியில் இருந்து கொண்டும் எவ்வளவோ உண்மை வித்வான்களை உள்ளவர்களுக்கெல்லாம் இடம் கொடுக்காமலும், சங்கீதக் கலைக்கு மிகவும் வேண்டப்படுவதான நாடிக் காட்டும் திறமை ஒரு சிறிதும் இல்லாமல் ஒரு தபஸ்வரமான வாயை உடையவரும், ஜாதிப்பற்று கொண்டவருமான ஒருவரையே இந்த யுங் காரியங்கள் செய்ய ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இவைகளை யெல்லாம் கண்ட நான் இந்தக் கல்லூரியும் முன்புள்ள ஜாதிப்பற்றுக் கொண்ட கல்லூரிகள் போலவே காரியங்கள் செய்ய ஏற்படுகிறதோ என்று சந்தேகித்து, இதுவரை நல்ல முறையில் ஏற்பட வழி இல்லையே என்று வருந்தி, எனது மதிப்பிற்கும், எல்லா உண்மைச் சங்கீத வித்வான்களிடத்திலெல்லாம் ஜாதி மதம் பாராது விரும்பி அவர்களிடத்தில் அன்புகொள்ளும் உயர்ந்த மனப்பான்மை கொண்ட சங்கீத வித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையை அணுகி அவரும் அந்தக் கமிட்டியில் இருப்பதை அறிந்து என்ன இப்படி நடந்துவிட்டதே என்று கேட்டேன்.

அவர் அதற்கு ஆமாம், என்ன செய்வது, எல்லாம் இதை நிர்வகிக்க ஏற்படுத்தப்பட்டவரின் தந்திரம்தான் இதற்குக் காரணம், இருந்தாலும் என்னையும் அவர், இந்தக் கமிட்டியில் போட்டிருக்கார், கூடுமான வரை நல்ல முறையிலேயே இந்த நாட்டு நிலை அமைப்பதற்கும், தக்க வித்வான்களுக்கும், பட்சபாதமில்லாமல், எல்லாக் காரியங்களும் நடக்கப் பாடுபடுவேன் என்று கூறித் தானும் சரியாக நடந்துகொள்வதாகச் சொன்னார்.

நானும் தாங்களும் இருந்து இதுவரை ஒரு கூட்டத்தினரே பெரும்பான்மையாக இருந்து கொண்டு சிறிதும் நியாயமில்லா முறையில் அநேக சங்கீத வித்வான்கள் உண்மையாகவே போதிய யோக்யதையும், ஆற்றலும், நிர்வாகத் திறமையுமுள்ளவர்கள் இந்த நாட்டு விரோதமாய் அடைய வேண்டிய மற்றைக் கூத்தவர்களும் இருக்கும் போது, ஜாதித் துவேஷம் கொண்டவர்களும், வேறு அனுபவசாலிகளும் இல்லாமல் கொண்டு, தாங்களே உண்மையாக அடைய வேண்டியவர்களுக்குப் பெரிதும் இடைஞ்சலாக இருந்து கொண்டு, அநியாயம் செய்து வருவது போல் இல்லாமல், இந்தக் கல்லூரியை யாவது நியாயமாக நடத்த உதவுவீர்கள் என்று நம்புகிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன்.

சிறிது நாள் சென்றவுடன், கர்நாடக சங்கீதக் கல்லூரியின் எல்லா ஏற்பாடுகளும் உத்யோகமும் யார் யாருக்கு எம்முறைப்படி எந்தந்த தகுதிப்படி கொடுத்து முடிந்திருக்கிறது என்பதைப் பத்திரிகை வாயிலாக அறிந்து இவைகள் முன்னை விட முழு மோசமாக நடந்திருப்பதைக் கண்டு, பெரிதும் வருந்தி, மறுபடியும் வித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களைக் கண்டு என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள் என்று கேட்டேன்.

அவர் அதற்குத் தன்மேல் ஒன்றும் தவறில்லை யென்றும், தன்னை, விலபஸ் கமிட்டி, உத்யோகச்சம்பள நிர்ணயக் கமிட்டி, மாணவர்கள் செலக்ஷன் கமிட்டி இவைகளில் தான் போட்டிருந்தார்கள். உத்யோகம் கொடுக்கும் ஆலோசனைக்கமிட்டியில் போடவில்லை ஆதலால் இந்தத் தவறு இயற்கையாகவே நடந்துவிட்டது. எனக்கும் இது பற்றி வருத்தமேதான், நானும் இது பற்றி மேல் அதிகாரிகட்கும், திரு தோழர் டி. எஸ். அவினாசிலிங்கம், அவர்களுக்கும் தெரிவித்துக்கொண்டுதான் இருக்கிறேன். இன்னும் இது பற்றித் தங்களைப் போன்ற உண்மையில் மதுர கலை வளர்ச்சியில் பற்றுக்கொண்ட நமது சகோதர வித்வான்கள் என்னை இதுபோன்ற நியாயமான கேள்விகள் கேட்டதற்கு அவர்களுக்கெல்லாம் ஒரு அறிக்கை இசையப் பத்திரிகையில் சுருக்கமாகக் கொடுத்திருக்கேன்; தாங்கள் அதைப் பார்த்திருக்கலாமென்று கருதுகிறேன்; இன்னும் இந்தத் தவறைத் திருத்தி நல்ல முறையில் எல்லோருக்குமே இதில் நியாயமான பங்கு ஏற்படும் வகைக்குப் பாடுபடவும் பொது ஜனங்கள் மத்தியில் வெளிப்படுத்தத் தங்களைப் போலவே பாடுகள் செய்து வருகிறேன், ஆதலால் நாங்கள் என்மேல் எந்த மனத் தாங்கலும் அடையாமல், இனிமேலும் ஒரு முறை தங்கள் விண்ணப்பங்களைப் பொது மக்கட்கும் இந்த நாட்டு மற்ற அதிகாரிகளுக்கும், மேலே உள்ள உண்மைப் பெரியார்களான அதிகாரிகட்கும் தெரிவிக்கலாம்; நானும் அவ்வப்போது தங்கள் நியாயமான கோரிக்கைக்கு இணங்குவதற்கு ஒருப்படுகிறேன் என்று கூறிவிட்டார்.

ஆதலால், பொது மக்களே இந்த கர்நாடக சங்கீதக் கல்லூரி முன்பெல்லாம் நடந்துவந்த சென்னை ம்யூஸிக் யூனிவர்ஸிட்டியைப் போலவே இன்னும் அதைவிட மோசமான நிலைமையில் பிரின்ஸ்பால் புரொபஸர், லெக்சரர் முதலியவர்கள் இந்த நாட்டு வித்வசாமர்த்திய பாடத்தாமனார், ஒரு குலத்தவர்களுக்கே, அதிலும் கருதி இல்லாதவர்கட்கே, மேலும் தாங்களே மாணவர்களாய் இருக்க வேண்டிய தகுதியில் உள்ளவர்களுக்கே, கொடுத்து மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை சென்ற போல், புல்லாங்குழல் செக்ஷன் ஏற்பாடு செய்திருந்தும் அதற்குத் தேர்ந்தெடுக்க வண்டிய புல்லாங்குழல் வாசிப்பவர் வாய்ப்பாட்டிற்கு ஏற்பாடு செய்தும், இன்னும், இம்மாதிரி கல்லூரியில் இருந்து பழக்கப்படாதவரும், பெரும் ஜனங்களால் விரும்பப்படாதவருமான ஒரு பெண்பிள்ளையை அதாவது இருந்தார் என்னும் யாருக்குமே தெரிந்துகொள்ள முடியாத அவ்வளவு இருட்டில் இருந்த ஒரு அம்மையாரை லெக்சரராக ஏற்படுத்தியும், வீணை என்னும் வாத்தியத்தை முறைப்படி எவரிடமுமே முறையாகக் கற்றறியாத ஒரு சாதாரண வித்வானை வீணை லெக்சரராக ஏற்படுத்தியும் (இவர் பெயர் சிவானந்தம்) இந்த உயர்ந்த கல்லூரியை விஷயம் புரியாதவர்களும், அட்வகேட்டுகளும், ஜாதித் துவேஷம்கொண்டவருமான பெருச்சாளிகளாய் இருந்துதாங்களே பொதுப் பணத்தை நியாய விரோதமாய் இருந்து அடைந்தவர்களும் இப்படிச் செய்துவிட்டார்கள்.

ஆதலால், நீங்கள் இவைகளையெல்லாம் அறிவோடு, இது விஷயமாக என்னால் நடத்தப்படும் கூட்டங்களுக்கும் தோழர் வித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையின் விளக்கங்களுக்கும் செவிசாய்த்து நமது நாட்டு உண்மையான இசைக் கலை வளர்ச்சிக்கும், மற்றும் இந்த நாட்டு எல்லாக் குல வித்வான்கட்கும் நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளைக் கிடைக்கச் செய்வதற்கு பங்குகொள்ள வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.'

வேலாயுதம் நினைவு நாள்

உடையார்பாளையம், நவ. 20—

'வேலாயுதம் (இரண்டாம் ஆண்டு) நினைவு நாள்' 13—11—49 ஞாயிறு பகல் 12 மணிக்கு, உ. தா. அய்யப்ப நாய்க்கன் பேட்டையில், வன்னியர் கல்வி வளர்ச்சிக் கழக ஆதரவில், தஞ்சை நாட்டாண்மைக் கழக உறுப்பினர் தோழர் கே. ஆர். சம்பந்தம் பி. ஏ. அவர்கள் தலைமையில் தொடங்கியது. அதுபோது,

பேட்டை தோழர் மு. சிவன் செயல் அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். தலைவர் முன்னுரைக்குப் பின்னர் உடையார்பாளையம் தோழர் கே. ஏ. அரங்கசாமி அவர்கள் வேலாயுதம் உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். பிறகு இடையக்குறிச்சி தோழர் கோ. குழந்தைவேலன் அவர்கள் வேலாயுதம் உருவப்படம் கன்மூன்றைஎட்டு ரூபாய்க்கு ஏலம் விட்டு, தொகையை வேலாயுதம் அவர்களின் செல்வி மங்கையர்க்கரசிக்கு அளித்தார். பின்னர் உடையார்பாளையம் தோழர் சி. செ. கோவிந்தசாமி அவர்கள் திருக்குறளில் 'கடவுள் வாழ்த்து' என்ற பகுதியிலுள்ள குறள்களுக்குப் பொருள் விளக்கம் கூறினார்.

பிறகு, தோழியர் வே. மங்கையர்க்கரசி, பேட்டை தோழர் அ. கண்ணுச்சாமி, ஷியூர் தோழர் அந்தோணிசாமி, உடையார்பாளையம் தோழர் ம. கு. பெரியசாமி, மாயவரம் தோழர் சுப்ரமணியன் பி. ஏ., கும்பகோணம் தோழர் எஸ். கணபதி, திருக்களப்பூர் தோழர் கே. தங்கராசன் முதலிய பெரியார்கள் சொற்பொழிவாற்றினர்.

பின்னர், வேலாயுதம் கொலை வழக்கைத் திரும்பவும் விசாரணைக்குக் கொண்டு வரவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுவதாக அண்ணன்காரன்குப்பம் தோழர் என். எஸ். ஆழ்வார் ராமானுஜம் அவர்களால் முன் மொழியப்பட்டு காகுழி தோழர். ராஜமாணிக்கனார் அவர்களால் வழி மொழியப்பட்டுக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது. பிறகு பேட்டை அ. கிருஷ்ணசாமி அவர்கள் கழகத்துக்கு நிதி அளித்தவர்களின் பட்டியலை வாசித்தார். கூட்டத்துக்கு சுமார் 500 பேர் வந்திருந்தனர். முடிவில் கழகத் தலைவர் தோழர் கே. ஆர். விசுவநாதம் எம். ஏ. அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற மாலை 5 மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது.

(உ-ம்)

சேலம் மாவட்ட தி. மு. கிளைக் கழக செயலாளர்களுக்கு

வேண்டுகோள்

அங்கத்தினர் பதிவுப் புத்தகம் வேண்டுமென்று கேட்டிருந்த எல்லாக் கிளைக்கழகத்தினருக்கும் புத்தகங்கள் அனுப்பியிருக்கிறேன். ஒரு சிலரைத்தவிர மற்றவர்கள் புத்தகங்கள் கிடைத்த தகவல் எனக்குத் தெரியப்படுத்தவில்லை. தயவு செய்து ரசீது புத்தகங்களைப் பெற்றுக்கொண்ட தோழர்கள், விபரம் தெரிவிப்பதுடன், ஏற்கனவே சேர்த்த முறைப்படி இருக்கும் புத்தகங்களில், மாவட்டக் கிளைக்கும் மற்றிய கழகத்துக்கும் சேர வேண்டியதையும், அங்கத்தினர் உறுப்பினர் ரசீதுகளையும், உடனே தலைமை நிலையத்துக்கு அனுப்பி விட்டு அதன் விபரமும் எனக்குத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன். மேற்கொண்டு புத்தகங்கள் வேண்டுவோரும் எனக்குத் தெரியப்படுத்தினால்உடன் புத்தகம் அனுப்பி[illegible]கிறேன். அடுத்த ஜனவரி[illegible]களில் இம்மாவட்டத்தில் அ[illegible]துரை அவர்கள் சுற்றுப்[illegible]ணம் நடத்த திட்டமிடப்ப[illegible]து. அதற்குள், ஏற்கனவே கிளைக்கழகம் ஏற்படுத்தியுள்ள இடத்தில் பெருவாரியான அங்கத்தினர்களைச் சேர்க்கவும், கழகம் அமைக்கப்படாத இடங்களில் உடனடியாக கழகம் அமைக்கவும் முயற்சி எடுத்துக் கொள்ளுமாறு எல்லாத் தோழர்களையும் வேண்டுகிறேன்.

அ. சித்தையன்
அமைப்புக்குழு உறுப்பினர்,
சேலம்.

கிஸான் தலைவர் கைது

மதுரை, நவ. 17—

தமிழ்நாடு பிரபல கிஸான் தலைவர் சோஷலிஸ்ட் தோழர் எஸ். ஆர் கோபால கிருஷ்ணன் இன்று காலை சோழவந்தான் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரால் மதுரையில் கைது செய்யப்பட்டார். பின்னர் மதுரை அடிஷனல் சிட்டி மஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு உடன் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்.

அகில இந்திய ஹிந்து கிஸான் பஞ்சாயத்து பொதுக்காரியதரிசி, பூனா, தோழர் பண்டித ராமானந்த மிஸ்ரா, சென்னை மாகாண ஹிந்து கிஸான் பஞ்சாயத்து ஜெனரல் காரியதரிசி தோழர் கெ. ஜி. சிவசுவாமி, தமிழ் நாடு கிஸான் தலைவர் தோழர் எஸ் ஆர். கோபால கிருஷ்ணன் ஆகியவர்கள் மீது சென்னை பொது அமைதிப் பராமரிப்பு சட்டம் 9—பி-(1) பிரகாரம் 1949 மே மாதம் தோழர் மிஸ்ராவின் தென் இந்திய சுற்றுப்பிரயாணத்தின் போது செய்த பிரசங்கங்கள் சம்பந்தமாக போலீசாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வழக்கு மதுரை அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் 30—11—49ல் ஆரம்பமாகும்.

(உ-ம்)

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களிலும் அனுப்பும் மணியார்டர்களிலும் தங்கள் சந்தா எண்ணைக் குறித்து எழுதும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சந்தா எண் குறிக்காமல் எழுதினால் கவனிக்கப்பட மாட்டாது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர், 'மாலை மணி'

எல்லோரும் இன்புற்றிருக்கப் புத்துலகம் நோக்கிப் புறப்படுவோம், வாரீர்!

பழைமை அகலட்டும், பகுத்தறிவு வளரட்டும்

—————:0:—————

பொல்லாங்கு தீர பொதுவுடைமை பூக்கட்டும்

————(0)————

சென்னை அரசினர் கல்லூரித் தமிழ்ச் சங்கக் கூட்டத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை, நவ. 12—

சென்னை அரசினர் கலைக்கல்லூரியின் சிதக்காதித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் சிறப்புக் கூட்டம் ஒன்று 9-11-49 மாலை ... மணிக்குத் தொடங்கி நடைபெற்றது. சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளர் தோழர் கே. எஸ். மகாதேவன் எம். ஏ., அவர்கள் தலைமை வகித்தார்கள்.

சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டிருந்த தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை ... தலைவா ஆசிரியர் சொக்கலிங்கனார் அவர்கள் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினர்.

சங்கத்தின் செயலாளர் தோழர் ஏ. ஏ. வெங்கடாசலத்தினால் முன்னைய கூட்டத்தின் அறிக்கை படிக்கப்பட்டது.

தலைவர் முன்னுரையாகத் தமிழாசிரியர்கள் நிலை குறித்தும், அவர்களில் பெரும்பாலோர் பழமையுலகத்திலேயே எவ்வாறு உழன்று வருகின்றனர் என்பது பற்றியும், புது உலகத்தில் வாழத்தக்க அளவுக்கு அவர்கள் தங்களைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் பற்றியும் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறினர்.

பின்னர், "புதியதோர் உலகம் செய்வோம்" என்னும் பொருள் பற்றிப் பேசும்படி, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைக் கேட்டுக் கொண்டார். தோழர் இரா. நெடுஞ்செழியன் பேசிய சுமார் 1½ மணி நேர சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்படுகிறது;

"தலைவரவர்களே! மாணவத் தோழர்களே! மகிழ்ச்சியும் வணக்கமும்! புதியதோர் உலகம் செய்வோம் என்ற பொருள் பற்றிப் பேச உங்கள் முன் வந்து நிற்கிறேன். தலைவரவர்கள் தன் முன்னுரையில் நான் செய்யப்போகும் புதிய உலகம் எப்படி இருக்கிறது என்று பார்த்து, அவ்வுலகில் குடியேறத் தங்களை தகுதிப்படுத்திக்கொள்ளுவோம் என்ற முறையில் தெரிவித்தார். புதியதோர் உலகத்தை நான் ஒருவனே செய்வதாகவோ, அல்லது செய்யப்போவதாகவோ, அல்லது செய்து கொண்டிருப்பதாகவோ சொல்ல உங்கள் முன்வந்து நிற்கவில்லை. உங்களையும் சேர்த்துக்கொண்டு செய்யத்தான் 'புதியதோர் உலகம் செய்வோம்' என்று குறிப்பிடுகிறேன். விரும்பும் புதிய உலகத்தை—தேவைப்படும் புதிய உலகத்தை உங்களிடம் கூறுகிறேன். அவ்வுலகம் மக்கள் வாழ்வுக்கான ஏற்ற உலகந்தானா என்பதை, எதிர்காலத்தில சிந்தனைச் சிற்பிகளாக விளங்கப்போகும் நீங்கள் சிந்தித்துப்பாருங்கள். சரியென்றுபட்டால் இசைவு தாருங்கள். எல்லோரும் சேர்ந்து இருக்கும் உலகைவிட்டுப் புதியதோர் உலகத்திற்குச் செல்வோம்.

ஏமாற்றம் தொலையவேண்டும்

"இருட்டறையில் உள்ளதடா உலகம்" என்று புரட்சிக் கவிஞர் கூறுமாறு, இன்றைய நாம் வாழும் உலகம், இருட்டறையில் கிடக்கிறது அறியாமை யென்னும் இருளில் கிடந்து உழல்கிறது. போதுமான அளவுக்கு அறிவொளி பரவவில்லை. மேலை நாடுகளிலாவது, ஓரளவுக்கு அறிவொளி சற்றுச் சிறக்க விளங்க ஆரம்பித்துவிட்டது. இந்திய துணைக்கண்டத்திலோ வெனின் இன்னும் முக்கால் வாசிக்குமேல் தற்குறிகள். ஆகவேதான் புரட்சிக் கவிஞர் கூறினார், 'இருட்டறையில் உள்ளதடா உலகம்'' என்று. நம் இருக்கும் இந்த இருண்ட உலகில் சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றான்; வாயடிக்காரனும் இருக்கிறான்; கையடிக்காரனும் இருக்கிறான்; இவையெல்லாம் மறைவது எந்நாளில்? தம் கையில் கிடைத்தவற்றையெல்லாம் சுருட்டுகின்றவர்கள் ஏராளமானவர்கள். சொத்துக்களெல்லாம் சத்தியக்கு என்று ஏமாற்றுகிறவர்களும் இருக்கிறார்கள். இவையெல்லாம் போகவேண்டும் புதிய உலகம் பிறக்கவேண்டும்.

பழைமை அகலட்டும் பகுத்தறிவு வளரட்டும்

இன்றைய உலகம் மக்களை மதம் காரணமாகவும்—சாதியின் காரணமாகவும் பிரித்து வைத்து வெறியுணர்வு கொள்ளச்செய்துவருகிறது. பிறப்பினால் பேதங்கற்பித்து, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று பிரித்து வைத்து, உடார்ந்தவன் உல்லாசமாக வாழவும், தாழ்ந்தவன் இன்னல்ல இடந்துழலவும் ஆன நிலைமையை உண்டாக்கியிருக்கிறது. ஒருவனிடம் பெரும் பொருளைக் கொடுத்து விட்டு அவனைப் பணக்காரன் என்று அழைக்கச்செய்து, அவன் எப்படி வேண்டுமானாலும் சுகத்தைத் தேடிக்கொள்ள வழிவகை செய்து வைத்துள்ளது. மற்றொருவனை ஒன்றும் கொடுக்காமல் அவனை வறியவனாக்கி, பிணி, பட்டினி, சாவு ஆகிய கொடுமைகளுக்கு ஆளாக்கச் செய்து துன்பத்தின் எல்லையை எட்டிப்பார்க்கச்சொல்லுகிறது. ஒருவனை உண்ணச் சொல்லுகிறது; மற்றொருவனை உழைக்கச் சொல்லுகிறது. மூடப்பழக்க வழக்கங்களையும் குருட்டு நம்பிக்கைகளையும் காப்பாற்றித்தந்து, மக்களின் அறிவையும், ஆற்றலையும், உழைப்பையும், பொருளையும், காலத்தையும் பாழ்படும்படி செய்கிறது. இத்தகைய நிலைமைகள் அனைத்திற்கும் அடிப்படைக்காரணம் அறியாமையேயாகும். அந்த அறியாமையும், அதன் மீது கட்டப்பட்டிருக்கும் மூடநம்பிக்கைக் குருட்டுப் பழக்க வழக்கங்களும் அடியோடு அகற்றப்பட வேண்டுமாயின், பகுத்தறிவு ஒளி தோன்ற வேண்டும். பகுத்தறிவினால்தான் அவைகளையெல்லாம் வெருட்டி விரட்ட முடியும். எனவேதான், பழைமையின் மீது கொண்டிருக்கும் பக்தியைச் சற்று அகற்றிவைத்துவிட்டு, பகுத்தறிவின் மீது பற்றுக்கொள்ள வேண்டும் என்கிறேன்.

இளைஞர்களுக்கு

வேண்டாத பழைமையை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் வாழ்க்கைக்கு வசதி அளிக்கும் தன்மையில் இடம் பெறும் புதுமை வந்தால் அதை ஏற்றுக்கொள்ளும் உள்ள உரம், பெரியோர்களுக்கு ஏற்படாவிட்டாலும், இளைஞர்களாகிய—மாணவர்களாகிய உங்களுக்கு அவசியம் ஏற்பட்டிருக்க வேண்டும். உழைப்பைக் குறைத்து-பயனை மிகைப்படுத்தி—இன்பத்தைப்பெருக்கும் புதுமையை ஏற்றுக் கொள்ள இளைஞர்களுக்கு விருப்பம் முதலில ஏற்பட வேண்டும். நல்லனவற்றை ஏற்று, அல்லனவற்றை நீக்க பகுத்தறிவு தேவை.

புதுமையைப் போற்றுமின்!

நமது தமிழ் இலக்கியங்களாகக் கருதப்படும் இடைக்கால நூல்கள் பகுத்தறிவுக்கு மாறுபட்ட, மூடநம்பிக்கை, குருட்டுப் பழக்கவழக்கங்கள் செறிந்தனவாகக் கருதப்படுவதால்தான் அந்தக் கருத்துகளைக்கொண்ட புராண இதிகாசங்களை ஒதுக்கிவையுங்கள். வாழ்வைப் பாழ்படுத்தும், மக்களை இழிவுபடுத்தும் கருத்துக்களை அகற்றுங்கள். வாழ்வுக்குத்தேவையான-காலத்தோடு ஒட்டிவரும் பகுத்தறிவுக்கருத்துக்களுக்கு இடம்தந்து புது கவிதைகள் புனையவும், காவியங்கள் எழுதவும், உரைநடைகள் இயற்றவும், அவற்றின்மூலம் புதியதோர் உலகம் காணவும் நீங்கள் முற்பட வேண்டும்.

புத்துலகு நோக்கிப் புறப்படுவோம்!

எல்லார்க்கும் எல்லாம் உண்டு என்று கூறுகின்ற இடம் நோக்கி நாம் எல்லோரும் நடவேண்டும். அங்கு கல்லார் யாரும் இருக்கமாட்டார்கள்-இருக்கக் கூடாது கல்வி நல்காத கசடர்கள் இருப்பார்களாயின் அவர்களுக்குத் தூக்குமரம்தான் பரிசுப் பொருளாக வழங்கப்பட வேண்டும். பிறர் பொருளைத் தனியொருவன் தனது என்று சொல்லமாட்டான் - சொல்லக் கூடாது. பிறரை வருத்தும் தனியுடைமை அங்கு இருக்காது. எல்லோர்க்கும் ஒத்த வாய்ப்பும், ஒத்த இன்பமும் பயக்கும் பொதுவுடைமையே அங்கு துலங்கும். அங்கு எல்லோரும் நல்லவர்களே. அத்தகைய புதிய உலகத்தை செய்யவும், அதனிடம்போய்ச் சேரவும் நீங்களனைவரும் உறுதியும், உள்ளமும் கொள்ள வேண்டும்.

புதியதோர் உலகம் செய்ய நாம் முற்பட்டு விட்டோமெனில், கிழியட்டும் பழம் பஞ்சாங்கம்! அதைப்பற்றி நமக்குக் கவலை வேண்டாம்!'

என்றும், இன்னும் பல எடுத்துக்காட்டுக்களைக் காட்டி, புதியதோர் உலகம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திப் பேசினர்.

தலைவர் முடிவுரைக்குப்பின் சங்கச்செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதே கலைந்தது.

(ந-நி)

குதிரைப்பந்தயம் இன்னும் ஓராண்டு காலம் நீடிக்கும்

நல்ல குதிரைகளைத் தயார் செய்ய பந்தயம் தேவையாம்!

சூதாட்டத்தை ஒழிக்கும் சூரர்களின் தீரப்பணி!

"சென்னை குதிரைப் பந்தய சூதாட்ட ஒழிப்புச்சட்டத்தை அமுல் நடத்தும் தேதியை ஒரு வருஷகாலத்துக்கு, அதாவது 1951-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி வரை ஒத்தி வைக்க சர்க்காருக்கு இச்சபை அனுமதிதருகிறது''

என்ற தீர்மானத்தை தோழர் என். எஸ். வரதாச்சாரியார் மூன்மொழிய, அதற்கு தேச பக்த அங்கத்தினர்கள் ஆதரவு தர கடந்த 20-ம் தேதி சென்னை சட்டசபையில் குதிரைப்பந்தய ஒழிப்பு வேலை ஒருவாறு ஒத்திப்போடப்பட்டுவிட்டது!

1950-ம் ஆண்டு ஏப்ரலில் ஒழிவதாக இருந்த குதிரைப்பந்தயம் மேலும் ஓராண்டு காலம் தன்னுடைய ஆட்சியை நிலைநாட்டி விட்டது. பொதுமக்களின் பணத்தைப் பாழாக்கும் இந்த சூதாட்டம் ஒழிய வேண்டும் என்று வற்புறுத்தாதவர்களே கிடையாது. அரசியலாரும் பொது மக்களின் கருத்துக்கு மதிப்பு தருவது போல் நடித்தனர். ஆனால், அதே கண்ணிய புருஷர்கள், பொருளாதார நெருக்கடியை உத்தேசித்து குதிரைப் பந்தயத்தை ஒத்திப் போடுகிறோம், என்கின்றனர்.

குதிரைப் பந்தய ஒழிப்பு வேலையை ஒத்திப் போடுவதன் மூலம் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க நினைக்கும் அன்பர்கள் ஜமீன்தார்களுக்குக் கோடிக்கணக்கில் கொட்டிக்கொடுக்க முன் வந்தது ஏன்? பல கோடி ரூபாய்களை நஷ்ட ஈடு என்ற முறையிலே ஜமீன்தார்களுக்குக் கொடுத்து விட்டு ஒரு கோடி ரூபாய் கூட வருமானம் வராத குதிரைப்பந்தயத்தை ஆதரிப்பதன் மூலம் லட்சக்கணக்கான குடும்பங்கள் சூதாட்டத்தால் குட்டிச் சுவராகும்படி அனுமதிப்பதேன்? பணம் ஒன்றினையே குறிக்கோளாகச் சொல்வதானால் குதிரைப் பந்தயம் ஒழிப்பு மட்டுமல்ல; மது ஒழிப்புகூட செய்யாமலிருந்திருக்கலாமே! அப்படிச் செய்திருந்தால் 17½ கோடி ரூபாய் லாபம் கிடைக்குமே!

எனவே, பொருளாதார நெருக்கடியைக் காரணமாகக் காட்டி குதிரைப்பந்தயம் என்னும் கொடிய சூதாட்டத்தை வளர்ப்பது, ஆட்சியாளருடைய சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தமில்லை என்பதையே காட்டுவதாகும். இங்ஙனம் குதிரைப்பந்தயத்தை நீடிக்கச் செய்வதற்கு ஆட்சியாளர் மற்றொரு விசித்திரமான காரணமும் கூறுகின்றனர். காஷ்மீர் போருக்கு நல்ல குதிரைகள் தேவையாம்; அதற்காக குதிரைப்பந்தயம் இருக்க வேண்டுமாம்! இது சென்னை அரசியலார் சொல்லுவதல்ல. இந்தியாவின் முதலமைச்சர் பண்டித நேரு இங்ஙனம் சென்னை அரசியலாருக்குத் தெரிவித்திருக்கிறாராம். அவர் எழுதிய கடிதம், இந்தக் குதிரைப் பந்தய நீடிப்புக்கு ஒரு முக்கிய காரணமாகக் காட்டப்படுகிறது. நமது தேசியத்தார் சனால் என்றால் இதனை என்னவென்று சொல்லுவது!

வானொலிமூலம் இந்தி போதனையாம்!

இந்தியைத் தேசியமொழியாக்கிவிடுவதென அரசியலமைப்பு சபை முடிவு செய்திருப்பதையொட்டி, அனைத்திந்திய வானொலி நிலையமும் விரைவில் இந்தி போதனைக்கான பாடங்களை-அடிப்படையிலிருந்தே-ஒலி பரப்புமென செய்திக் குறிப்பொன்று கூறுகிறது. இப்படிப்பட்ட ஆரம்ப பாடங்கள் மூன்று மாதகாலம் தொடர்ந்துபோதிக்கப்பெற்று வருமாம். இந்திய பிரதம மொழியாக இல்லாத இடங்களிலெல்லாம், அதாவது, கல்கத்தா, ஷில்லாங்-கௌஹாத்தி, கட்டாக, சென்னை, விஜயவாடா, திருச்சிராப்பள்ளி, பம்பாய், அகமதாபாத், ரோடா ஆகிய இடங்களிலுள்ள வானொலி நிலையங்களிலெல்லாம் மேற்படி பாடபோதனை ஒலி பரப்பப்படுமாம்.

பிரதிநிதித்வம்பெற்ற சபையொன்று யதேச்சாதிகாரமாய்ச் செய்த பொறுப்பற்றமுறைவை, ஏலாத மக்கள்மீது ஆதிக்க வசதிகொண்டு திணிக்க முயல்வது நீண்டநாளுக்கு வெற்றிதராதென்பதை ஆளவந்தார்கள் இப்போதில்லாவிடினும், இன்னும் சின்னாட்களில் உணர்ந்தே தீருவர்.

வக்கீல்கள் கூடுவர்

அனைத்திந்திய லாயர்கள் மகாநாடு ஐதராபாத்தில் 1950 ஜனவரி 7-ந் தேதி யன்று ஆரம்பமாகவிருக்கிறது. இம் மகாநாட்டுக்கு பூனா பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் எம். ஆர். ஜெயக்கர் தலைமைதாங்குவாரெனத் தெரிகிறது.

பாட்டாளியின் துயர் கண்டு பரிதாபம்

தொழில் அமைச்சரின் பழைய பல்லவி!

பயனுள்ள பணியற்ற முன்வரட்டும்

"பணமும்அதிகாரமும்படைத்தோரையே இன்றும் இந்தியாவில் நாம் மதிக்கிறோம் அவை இரண்டும் சூழ்நிலை காரணமாக ஒருவனுக்குக் கிடைப்பவை. எவராலும் அவற்றைக்கட்டுப் படுத்த இயலாது உழைப்பின்மதிப்புக்கு உரித்தான கௌரவம் இன்னும் அளிக்கப்படவில்லை. சமுதாயம் வாழ என்றும் உழைத்து உழைத்து ஓடாகும் மக்களை அதேஉழைப்பதைத்தங்கள் சுகபோக வாழ்வுக்கு நம்பியிருக்கும் மாந்தர்கள், உதாசீனம் செய்து தங்களுக்குக் கீழ்ப்பட்டவராக மதிப்பது விபரீதமல்லவா?"

என்று இந்திய அரசாங்க தொழிலமைச்சர் தோழர் ஜகஜீவன்ராம் அண்மையில் காசியிந்து பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார். தொழில் அமைச்சர் இங்ஙனம் பாட்டாளி மக்களின் துயரை படம் பிடித்தாற்போல் பக்குவமாகப் பேசி யிருப்பதை நாம் பாராட்டுகிறோம். ஆனால் அமைச்சர் இங்ஙனம் தொழிலாளருக்காகக் கண்ணீர் விடுவது நாம் அடிக்கடி தேசியத்தார்களில் காணும் காட்சி! தோழர் ஜகஜீவன்ராம் தொழில் அமைச்சர் என்ற முறையிலே தொழிலாளர் துயர் பற்றி எதையேனும் பேசித் தொலைக்க வேண்டுமே என்பதற்காக இங்ஙனம் அடிக்கடி பேசுகிறாரோ, அல்லது உண்மையிலேயே நிலை உணர்ந்து பேசுகிறாரோ என்பது தான் நமக்குப் புரியவில்லை. ஏனெனில், தொழில் அமைச்சர் பேசுகின்ற பேச்சுக்கும், இந்திய சிலர் பேசுகிற போக்குக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேற்றுமை காணப்படுகிறது.

இந்திய அரசியலார்க்கு உண்மையிலேயே தொழிலாளர் நலத்தில் அக்கறை இருக்குமானால் ஆங்கில அரசாட்சியோடும், அயல் நாட்டு முதலாளிகளோடும் இன்று உறவாடுவது போல் உறவாடுவார்களா? தொழில்கள் தேசிய மயமாக்கப்படும் முயற்சியைத் தள்ளிப் போவார்களா என்று கேட்கிறோம்.

அமைச்சர் ஜகஜீவன்ராம் பேசியிருக்கும் இடம் இந்து சர்வகலாசாலை. பேசியிருக்கும் வேளை பட்டமளிப்பு விழா நடைபெற்ற வேளை. இங்ஙனம் பட்ட மளிப்பு விழாவில் பாட்டாளிகளின் துயரப்படலம் பற்றிப் பேசியிருப்பது பட்டதாரிகளிடையே இந்திய ஆட்சியார் பாட்டாளிகளிடம் அனுதாபங் கொண்டவர்கள் என இருக்கின்றார்கள் என்பதைக் காட்டுவதற்காகவா என்று கேட்கிறோம். ஆகவேமீண்டும் மீண்டும் தொழில் அமைச்சர் இதே போன்று பழைய பல்லவியைப் பாடி மக்களைத்திருப்தி படுத்தலாம் என்று நினைக்காமல் உருப்படியான காரியங்களை மேற்கொள்வாராக.

ஆதித்திராவிடர் துயரம்

சட்டத்தின் மூலம் தீண்டாமையை ஒழித்துவிட முடியாது. ஜாதி இந்துக்களிடையே உண்மையான மனமாற்றம் ஏற்பட்டாக வேண்டும். இந்திய சர்க்காரின் பல்வேறு இலாகாக்களினின்றும் ஆதித்திராவிடர்கள் நீக்கப்பட்டு வருகின்றனர். எந்த ஆதித்திராவிடரும் கவர்னராகவோ, அம்பாசிடராகவோ நியமிக்கப்பட்டாரில்லை. பப்ளிக் சர்விஸ் கமிஷன்களிலும் மந்திரிசபைகளிலும் ஆதித்திராவிடர்இடம்பெறவேண்டுமென்று எத்தகைய நிபந்தனையும் செய்யப் பெறவில்லை. 'குற்றப்பரம்பரையினர்'என்று கூறப்படுவோர்க்கு நடமாட்ட உரிமையே மறுக்கப்படுகிறது உத்தியோக மொழியாக ஆக்கப்பட்டிருக்கும் இந்தி கடினமாயிருக்கிறது.

— எச். ஜெ. கண்டேகர்
அ. இ. சபை 21-11-49

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி

சென்னை, நவ. 22—

சென்னை நக்கீரர் கழகத்தின் சார்பில் நடைபெற்றுவரும் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியில் சனி, ஞாயிறு நீங்கலாக, மற்ற நாட்களில் மாலை 6-30 மணி முதல் 8-30 வரை வகுப்பு நடைபெறும் வித்துவான்பிரவேசம் (Entrance) பிரிலிமினரி ஆகிய இரு பாடங்களும் சொல்லிக் கொடுக்கப்படும்.

ஆசிரியர்கள்:-தோழர்கள் வித்துவான் ஜா. பா. இராஜசேகரனுர் (தலைவர்) பி ஜி. இராஜகோபாலன் எம். ஏ. (துணைத் தலைவர்) வித்துவான் பண்டித, மீ. பொன். இராமநாதனுர், வித்துவான் இராசசாமி, (முதலியார்) வக்கீல் பாலசுப்பிரமணியம் பி. ஏ; வித்துவான் இராமசாமி (நாயகர்) வித்துவான் சின்னண்ணன், ஜி. செல்வரங்கம் பி. எஸ். சி. ஆகியோர் ஆவர்.

குறிப்பு:—முதியோர் கல்வித்திட்ட வகுப்பு விரைவில் துவக்கப்படும். விளக்குச் செலவுக்கு வேண்டிய சிறுதொகை கட்டணமாக ஏற்றுக்கொள்ளப்படும். பெண்களுக்குத் தனியிடம் உண்டு. வித்துவான் முடிவு (Final) வகுப்பு விரைவில் துவக்கப்படும். இடம்:-தென் இந்திய பிரம்ம சமாஜம் 135, அண்ணுப்பிள்ளைத்தெரு, சிதம்பரம்நகர் சென்னை-1 எனக் கழக அமைச்சர் அறிவிக்கிறார்.

ஏஜண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

ஈரோடு
கோயம்புத்தூர்
உதகை

மானேஜர்
"மாலை மணி" சென்னை

சென்னை மேயர் தேர்தல்

சென்னை, நவ. 22—

சென்னை நகரசபைக்குப் புதிய மேயரைத் தேர்ந்தெடுக்கவேண்டி நகரசபை உறுப்பினர்கள் ரிப்பன் கட்டிடத்தில் இன்று மாலை 4-30 மணிக்குத் தற்கால மேயர் தோழர் எஸ். ராமசாமி அவர்கள் தலைமையில் தனியாகக் கூடினார்கள். சென்னை நகரசபையின் மேயர் தேர்தல் விதிப்படி இவ்வாண்டு கிருத்துவத் தொகுதியின் சார்பாக வந்த ஒருவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அதன்படி மேயர் தேர்தலுக்கு டாக்டர் செரியன் அவர்களும், டாக்டர் சந்தோஷம் அவர்களும் போட்டியிட்டனர். வோட்டெடுப்பில் மொத்தம் 82 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். டாக்டர் செரியன் 43 வோட்டுகள் பெற்று வெற்றி பெற்றார்.

வழக்கப்படி மாலை 5-15 மணிக்கு கவுன்சில் கூட்டம் முறைப்படி கூடி டாக்டர் செரியன் அவர்கள் ஏகமனதாக இவ்வாண்டு மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் நடைபெற்ற டெபுடி மேயர் தேர்தலில் தோழர்கள் என். ஜீவரத்தினம், ராஜாபாதர் அவர்களும், தோழியர் இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்களும் போட்டியிட்டதில் தோழர் ராஜாபாதர் அவர்கள் 48 வோட்டுகள் பெற்று வெற்றிபெற்றார்.

பின்னர் புதிய மேயரையும், டெபுடி மேயரையும் பலரும் பாராட்டி வாழ்த்துக் கூறினர். (ந-நி)

திருத்தம்

"மாலை மணி" (சென்னை) 22—10—49 (வெளியூர்) 23—10—49 இதழில் இசழ் எண் 72 என்று இருக்கவேண்டியதற்குப் பதிலாக 71 என்று தவறுதலாக அமைந்துவிட்டது. அசன்ப வாசகர்கள் தயவுசெய்து 71 A என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

(ஆ-ர்)

பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பாராளும் மன்றம்

இம் மன்றத்தின் தொடக்கக் கூட்டம் 24—11—49 வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு சேத்துப்பட்டு பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அதுபோது மாணவர்கள் மசோதா ஒன்றைக் குறித்து விவாதம் நடத்துவர். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பார்வையாளராக இருந்து சொற்பொழிவாற்றுவார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

24-11-49

வந்தவாசி :— சி. பி. சிற்றரசு, காஞ்சி. கல்யாணசுந்தரம், ஈ. வெ. கி. சம்பத்.

மங்கநல்லூர் :— ஏ. வி. பி. ஆசைத்தம்பி

26-11-49

தாராபுரம் :— இரா. நெடுஞ்செழியன், எஸ். அப்பாவு, பி. பழனிச்சாமி, என். இ. பாலகுரு

கல்கத்தா நீதிமன்றம் ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சட்டத்தின்கீழ் அவர்கள் குற்றவாளிகளாக மாட்டார்களெனத் தீர்ப்புக் கூறிவிட்டார் நீதிபதி. யதேச்சாதிகார சர்க்கார் ஒன்றின்கீழ் வாழும் மக்கள்தான் நிர்வாக நடப்பைக் குறைகூறக்கூடாது; நாம் அத்தகைய சர்க்காரின் கீழா வாழ்கிறோமென்று குறிப்பிட்டுத், தனது தீர்ப்பின் தத்துவத்தையும் தெளிவு படுத்தியுள்ளார் நீதிபதி.

சர்க்கார் போக்கை விரும்பாத மக்கள், அதன் மீது தமக்குள்ள அதிருப்தியைக்காட்டிக் கொள்வது குற்றமா? அதிருப்தியைக் கட்டதுண்டும் நிக்கை விநியோகிப்பது தவறா? இந்த சர்க்கார் பிடிக்கவில்லை, வேறு சர்க்காருக்கு வழிகோல வேண்டுமென விழைவது குற்றமாகுமா? இவையெல்லாம் தனி மனிதனின் ஜீவாதார உரிமைகளல்லவா! பலர் சேர்ந்த ஸ்தாபனங்களுக்கும் இது போன்று சர்க்கார் மாட்டு அதிருப்தியைக் காட்டிக்கொள்ள அடிப்படை உரிமையிருக்கிறதே! இத்தகு அடிப்படை உரிமையை மறுப்பது நியாயத்தின்பாற் படாதே! இத்துணையையும் உள்ளடக்கி தீர்ப்பு தந்துள்ளார் நீதிபதி.

நீதி கடிந்து ஒதுக்கக் கூடிய வகையில் நிர்வாகத்தில் எத்தனைகுறைபாடுகள் தலை விரித்தாடுகின்றன காங்கிரஸ் ராஜ்யத்தில் என்பதற்கு இது வொரு எடுத்துக்காட்டு. அடிஷனல் மாகாண நீதிபதி இது போன்று தீர்ப்பு வழங்குவாரென அப்போதே எதிர்பார்த்திருந்தால், இதற்கு சிறிதும் இடம் வைத்திருக்காது காங்கிரஸ் சர்க்கார் 'சுறை கூறினாலும் சரி, குழி தோண்டினாலும் சரி குற்றம் குற்றமே' என சட்டமியற்றியிருக்கும். இப்போதுதானென்ன? கம்யூனிஸ்ட் காவற்கைதிகள் பலரை விடுதலை செய்துவிட்டது உயர்நீதிமன்றம் என்பதற்காக, உயர்நீதி மன்றத்துக்கிருந்த அதிகார வியாபகத்தையே குறைக்கவில்லை சென்னை சர்க்கார்! சென்னைப் பொது அமைதி மசோதா அத்திருத்தத்தைப் பெறவில்லையா! அதேபோன்று மேற்கு வங்க சர்க்காரும் ஒரு சிறு திருத்தம் செய்ய இயலாத நிலையிலா இருக்கிறது?

மாற்றுக் கட்சிகளை நசுக்கு வதையே முன்னணி வேலையாகக்கொண்டு, நாட்டிலுள்ள அத்தனை பணமூட்டைப் பத்திரிகைகளையும் பாதுகாவலாய் வைத்துக்கொண்டு, அனைத்திந்திய வானொலிநிலையத்தைப் பிரசாரமேடையாகக்கொண்டு ஏககட்சி ஆதிக்கம் நடத்தும் ஒரு சர்க்கார், தனது நிரந்தர ஆதிக்கத்துக்கு என்னென்ன தேவையோ அதையெல்லாம் செய்துதான்தீரும். மக்கள் சக்தி திரண்டு எதிர்த்து நிற்கிறதென்று தெரிந்தும், மக்களுக்குகந்தவற்றை செய்ய முடியவில்லை யென்ற தோல்வி மனப்பான்மை வந்துற்ற பின்னரும், 'தோற்றுவிட்டோம்' என்று வெளிப்படையாக ஏற்றுக்கொள்வது போல அடக்குமுறைச் சட்டங்களை இயற்றி அமுல் செய்கிறது ஒரு சர்க்கார் என்றால், அது அத்தகைய அடக்கு முறைகளில் ஈடுபடுவது தனது நலத்துக்கா, மக்கள் நலத்துக்கா எனக் கேட்கிறோம். பேச்சுரிமை, எழுத்துரிமை நான்கு பேர் ஒன்றுகக் கூடுவதற்கு உரிமைஇன்ன பிற மிகமிக அடிப்படையான உரிமைகளைக்கூட வழங்க மறுக்கும் சர்க்கார் யாருடைய நன்மைக்காக, யார் நலத்தைப் பாதுகாக்க ஆட்சிப்பீடத்திலமர்ந்துள்ளது என்று கேட்கிறோம்.

சர்க்காரைக் குறைகூறிப் பேசுகின்றனரா, பிடித்துப் போடு சிறையில்! எழுதுகின்றனரா, கேள் ஆயிரம், பத்தாயிரமென்று ஜாமீன்! கூட்டம் போட முயல்கின்றனரா, போடு அங்கொரு 144! இப்படி வேலி கட்டிக்கொண்டு எத்தனை நாளைக்குக் காலந்தள்ள முடியும் ஒரு சர்க்காரென்று சாதாரண மனிதனும் இன்று கேட்கிறானே!

நியாயம் வெறுக்கும், நீதி கடியும் போக்கைக்கொண்ட சர்க்கார் மக்கள் சர்க்கார் தானா?

"நமது பாக்யம்"!

"முதலாளித்துவ நாடுகளில் விஞ்ஞானம், சமாதானத்தை விரும்பாதோர் கையிலிருக்கிறது"

—பேராசிரியர் பெர்னல்

"அதிர்ஷ்ட வசமாக, இந்தியாவில்அது விஞ்ஞானத்தை வெறுப்போர் கையிலேயே இருக்கிறது"

—'சங்கர்ஸ் வீக்லி'

மனித உரிமையைப் பறிக்கும் மடமை

இலங்கை அரசியலாரின் எதேச்சாதிகாரப் போக்கு

ஐ. நா. சபைக்கு அர்ப்பணம்!

"உலகம் முழுவதும் ஒப்புக் கொள்ளுகிற மனித உணர்ச்சி சம்பந்தமான கோட்பாடுகளை மீறி நாணய பரிவர்த்தனை, குடியேற்றக் கட்டுப்பாடு விதிகளை மிகவும் கடுமையாகப் பிரயோகித்து இலங்கை இந்தியர்களின் வாழ்க்கையை இலங்கை சர்க்கார் அசாத்தியமாக்குகிறது"

இது இலங்கை இந்திய காங்கிரஸ் கமிட்டி அண்மையில் தோழர் ராஜலிங்கம் அவர்கள் தலைமையில் கூடியபோது, நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் முக்கியமானதோர் தீர்மானமாகும்.

கடந்த சில மாதங்களாக இலங்கை அரசியலார் இலங்கை வாழ் இந்தியர் விஷயத்தில் மேற்கொண்டிருக்கும் செயல்கள் மிக மிகக் கொடியவை. இலங்கை இந்தியரின் மனித உரிமையையே பறிப்பதாகும், எனவேதான், மேற்கண்டவாறு மனித உரிமையை வற்புறுத்தும் தீர்மானமொன்றை இலங்கை இந்திய காங்கிரஸ் நிறைவேற்றியுள்ளது.

நாணய பரிவர்த்தனை விஷயத்திலும் குடிமக்கள் உரிமை வழங்கும் விஷயத்திலும் இலங்கை அரசியலார் விதித்திருக்கும் சட்டங்கள் இந்திய மக்களை; மனிதர்களாகவே வாழ வழிவிடாத சட்டங்களாகும். சாதாரணமாக, இதுகாறும் இலங்கை இந்தியர்கள் இந்தியாவிலுள்ள தங்களுடைய குடும்பங்களுக்கு மாதம் 25 ரூபாய் அனுப்பலாம் என்ற உத்தரவு அமுலிலிருந்து வந்தது. ஆனால், இனி 'பர்மிட்' முறை அமுலுக்கு வருமாம். இம்முறை அமுலுக்கு வந்தால் இந்தியர் வீண் தொல்லைகள் பலவற்றுக்கு ஆளாக நேரிடும். 'பர்மிட்' பெறுவதற்காக இலங்கை அரசியலார் ஏற்படுத்தியிருக்கும் விண்ணப்பத் தாளை (பாரம்) பூர்த்தி செய்வது எளிதில் ஆகக் கூடிய காரியமன்று. அதில் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கெல்லாம் தக்க விடை அளித்தாகவேண்டும். பின்னர், அது ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டால் பரிசீலிக்கப்பட வேண்டும். இவ்வளவு சடங்கு முறைகளும் சரிவர நிறைவேற்றப்பட்டாலன்றி பாரம் அனுப்பும் வாய்ப்பு கிட்டாது. அப்படி வாய்ப்பு கிட்டினாலும் ஏழ்க் குறைய ஆறுமாத காலங்களாகும். இந்நிலையில் இந்தியாவிலுள்ள அவர் தம் குடும்பத்தார், இலங்கையை எதிர்பார்த்திருக்கும் குடும்பத்தார் எப்படி இடர்ப்படாமல் வாழக்கூடும்?

அடுத்தபடியாக இலங்கை அரசியலார் குடிமக்கள் உரிமைக்காகச் செய்திருக்கும் சட்டமும் இம்மாதிரி பல இன்னல்களைத் தருவதாகவே இருக்கின்றது. இலங்கை இந்தியர் குடிமக்கள் உரிமையைப் பெற வேண்டுமானால், அங்கு பிறந்து வளர்ந்தவர்களாக மாத்திரம் இருந்தால் போதாதாம், தலைமுறை தலைமுறையாகவாழ்ந்தவர்களாகஇருக்க வேண்டுமாம்! மணமானவர்கள் 7 ஆண்டுகளும் மணமாகாதவர்கள் 10 ஆண்டுகளும் இலங்கையில் வாழ்ந்தவர்களாக இருக்கவேண்டுமாம். பிள்ளைக்குட்டிகளும் குடும்பமும் வெளிநாட்டில் இருநாட்டில் இருக்கக்கூடாதாம். வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் வாய்க்கப்பெற்றவர்களாக இருக்க வேண்டுமாம்.

இவ்வளவும், யாருக்கு இருக்க முடியும் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். ஒன்று சிங்களவர்களாக இருக்கவேண்டும், அல்லது அங்குக் குடியேறி கொள்ளையடிக்கும் இந்திய சீமான்களாக இருக்க வேண்டுமே யல்லாமல், வாழ வழியற்றும், தன்னாட்டில் பிழைக்கமாட்டாமல் சுரண்டுதல் காரணமாகவும் வெளியேறி இலங்கையில் குடியேறியுள்ள பல்லாயிரக் கணக்கான திராவிட மக்களுக்கு எங்ஙனம் பொருந்தி இருக்கமுடியும்?

எனவே, இலங்கை அரசியலார் செய்திருக்கும் சட்டங்கள் பெரும்பாலும் திராவிட மக்களையே பெரிதும் பாதிக்கக் கூடியனவாயுள்ளன. இலங்கை இந்திய காங்கிரஸ் தீர்மானப்படி இலங்கை அரசியலார் செய்திருக்கும் சட்டங்கள் திராவிட மக்களின் மனித உரிமையையே பறிக்கவல்லவை என்பது திண்ணம். இலங்கை அரசியலாரின் இப்படிப்பட்ட போக்கு நீடிப்பது நல்லதல்ல, இது முதலாளித்வ வெறியின்பாற்பட்டதாகையால், இந்த வெறியாட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய பொறுப்பு முழுவதும் ஐ. நா. சங்கத்தையே சார்ந்ததாகும். ஐ.நா. சங்கம் அலட்சியமாயிருந்தால நீதி அழிந்து அநீதி வளர இடமளித்ததாகும். மனித உரிமைக்கு மதிப்புதரவேண்டும் என்பது ஐ. நா. சபைக்கொள்கைகளில் மிகமிக முக்கியமானதாகும். அந்தக் கொள்கை காக்கப்பட வேண்டுமானால், இலங்கைப் பக்கம் சற்றுத் திரும்பிப்பார்க்க வேண்டுவது அச்சபையின் அவசரமும், அவசியமுமான பணியாகும். இலங்கை அரசியலாரின் போக்கு வெறியர்களின் போக்கு என்பதை ஐ. நா. சபை உணர வேண்டும் என்பதற்காக, இலங்கை அரசியலில் அங்கம் வகிக்கும் ஐரோப்பியரான தோழர் டி. ஓ. லாட் அவர்கள் கூறியிருப்பதையும் ஐ. நா. சபைக்கு அர்ப்பணம் செய்கிறோம்.

"இலங்கையின் தேசியம் பைத்தியக்காரத்தனமாகி விட்டது. அதற்கு இப்பொழுது சாவதேசியம் சற்று தேவைப்படுகிறது என்று நான் நினைக்கிறேன்" என்று கூறியுள்ளார்.

அரிசி விலை குறையலாம்?

டிசம்பர் 4-ந் தேதி முதற்கொண்டு கொள்முதல் விலை குறைக்கப்படுவதை முன்னிட்டு, டிசம்பர் இறுதியிலிருந்து அரிசி விலை ஓரளவு குறையுமென்றும், பொதுமக்களுக்கு இதனால் வசதியேற்படுமென்றும் கணக்கிடப்படுகிறது. இப்போதைய விலையினின்றும் நான்கு முதல் ஐந்து சதவிகிதம் குறையலாமென்றும் நம்பப்படுகிறது.

தொழிலாளர்க்கு வீடமைப்புத் திட்டம்

தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் மேற்கொள்ளப்படின், அதற்கு வேண்டிய மூலதனத்தில் மூன்றிலிரு பகுதியை வட்டியின்றி தாங்கள் கடனாகத் தருவதாக மத்திய சர்க்கார் தெரிவித்துள்ளனரென்றும், மீதி பகுதியை மாகாண சர்க்காரே போட்டுக்கொள்ளுமென்றும் மந்திரி தோழர் சஞ்சீவி அவர்கள் சென்னை மேல் சபையில் தெரிவித்தார்.

விவேகம் :: :: தெரிந்தவர்கள்!

குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டி சூதாட்டம் நடப்பதை 1951-ம் வருஷம் வரை நீடிக்க சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது. இந்த நீடிப்பு தவிர்க்க முடியாததாகி விட்டது. நீடிப்பதற்கு சட்டசபை காங்கிரஸ் கட்சி விரும்பாவிடினும், தற்போதைய சந்தர்ப்பத்தில் இந்த சூதாட்டத்தை 1951 வரை நீடிக்க வேண்டியதாயிற்று.

குதிரைப் பந்தயத்தில் சூதாட்டம் நடப்பதை தடுப்பதற்காக சென்னை அரசாங்கம் ஒரு மசோதாவை தயாரித்து சட்டமாக்கியது. 1950-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் சட்டத்தை அமுல் செய்யவும் முடிவு செய்யப்பட்டது. இந்தச் சீர்திருத்தத்தை பொது மக்கள் அமோகமாக வரவேற்றனர். சூதாட்டத்தால் பல குடும்பங்கள் பாழாவது தடுக்கப்படும் என்று இந்தச் சட்டம் வரவேற்கப்பட்டது.

ஆனால் தற்போதைய நிலைமை மிகவும் நெருக்கடியானது. பொருளாதார நெருக்கடி சர்க்காரை திணற வைக்கும் போது, சுமார் ஒரு கோடி ரூபாய் வருமானம் வரும் குதிரைப் பந்தய சூதாட்டத்தை ஒழிப்பது விவேகமாகாது என்று கருதப்பட்டது.

'தினத்தந்தி'
21-11-49

'சார்ஜு கொடுக்க' மறுக்கிறார்!

ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டி நியமித்த ஸ்பெஷல் ஆபிசரிடம் தனதுபொறுப்பை ஒப்படைக்க மேற்கு கோதாவிரி மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் சத்தியநாராயண ராஜூ மறுத்துவிட்டாராம். அண்மையில் நடந்த ஜில்லா போர்டு தேர்தல்கள் காங்கிரஸின் அதிகாரப் பூர்வமான அபேட்சகர்களை எதிர்த்து வேலை செய்தனரென்று குற்றஞ் சாட்டி, தோழர் சத்திய நாராயண ராஜூவும் இன்னும் ஒன்பது பேரையும் மாகாண காங்கிரஸ் கமிட்டி 2 மாத காலத்துக்கு 'சஸ்பெண்டு' செய்து 'சஸ்பெண்டு' உத்தரவையொட்டி, தலைவர் பதவியை ஸ்பெஷல் ஆபிசரிடம் ஒப்படையுமெனக் கேட்டதற்கு தோழர் ராஜூ மறுத்து விட்டாராம.

இனி நடப்பவை

மங்கலூர்—இவ்வூர் தி.மு.க. கிளையின் சார்பில் 24-11-49 வியாழன் மாலை 6 மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி சொற்பொழி வாற்றுவார்.

• • •

வாலாஜாபேட்டை—வாலாஜா தாலுகா வன்னியகுல க்ஷத்திரிய சங்க 20—வது மாநாடு, 27-11-49 காலை 9 மணிக்கு இந்நகர், நகராட்சி உயர் நிலைப்பள்ளியில் நடைபெறும். வேலூர் தோழர் எம். ஏ. மாணிக்கவேல பி.ஏ.பி.எல் அவர்கள்தலைமை வகிப்பார். தஞ்சைமாவட்டக்கழக உறுப்பினர் தோழர் ஆர். சம்பந்தம் பி. ஏ. மாநாட்டை திறந்து வைப்பார். வேலூர் தோழியர் பத்மாவதி அம்மாள் கொடியேற்றிவைப்பார் உடையார்பாளையம் வேலாயுதம் படத்தை, கடலூர் தோழர் ஏ. கோவிந்தசாமி திறந்து வைப்பார். மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

கழக நடவடிக்கைகள்

கோவை:—கோவைமாநகர திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் செயற்குழுக் கூட்டம் 5—11—49 அன்று கழகக் கட்டிடத்தில் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள்:- 1. 16-10-49-ந் தேதி "துவக்கவிழா" வரவு-செலவு கணக்குகள் சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

2. மாவட்டக்கழகத்திற்குஇக்கழகத்தின் சார்பாக 13 பேர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

3. கோவை நகராட்சி மன்றத்தினர் நகரமக்களுக்கு அடிப்படைத் தேவைகளான, கல்வி, சுகாதாரம் ஆகிய வசதிகள் செய்து கொடுக்க; "பணமில்லை, பணமில்லை" என்று சொல்லிவிட்டு, வடநாட்டு அகதிகளுக்கு மட்டும் ரூபாய் பத்தாயிரம் (10,000) செலவில் வாழ்க்கை வசதிகள் செய்து கொடுப்பதையும், பொதுமக்கள் வரிப்பணத்தை இப்படி வீணான முறையில் பாழ் செய்வதையும இக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

4. வடநாட்டு அகதிகளை, சென்னை மாகாணத்தில் நிரந்தரமாக தங்கவைப்பதால், இம்மாகாண மக்களுள் அமைதிக்குப் பங்கம் ஏற்படுமென இக் கூட்டம் கருதுவதால், அவர்களை உடனடியாக இம்மாகாணத்தை விட்டு வெளியேற்றுமாறு இக்கூட்டம் சென்னை அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது.

5, மேல்கண்ட 3, 4-வது தீர்மானங்களையும், கோவை நகரில் அகதிகள் தங்கியிருப்பதையும் துண்டுப் பிரசாரங்கள் அச்சடித்து நகர மக்களிடை வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. பின்னர் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ

* * *

விருதுநகர்:—இந்நகர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 13—11—49ல் தோழர் எஸ். உத்தண்டன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—மு. இளஞ்செழியன்; துணைசெயலாளர்:—மாரிகனி; பொருள் உறுப்பினர்:—எஸ். அய்யாசாமி, விளம்பர உறுப்பினர்:—ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

ஏனைய செயலுறுப்பினர்களாக 17 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு கீழ்க்கண்ட இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன,

1. "திராவிட நாடு" இதழின் ஜாமீன் தொகையைத் திருப்பி அளிக்கும்படி தீர்ப்பளித்த நீதி மன்ற முடிவு கண்டு இக்கூட்டம் மகிழ்கிறது.

2. அரசினரால் இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட திராவிடர் இயக்க நூல்கள், நாடகங்கள் ஆகியவைகளை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் ஓர் வழக்குத் தொடர, தி. மு. தலைமைக் கழகத்தை இக் கூட்டம் வேண்டிக்கொள்கிறது. (வி உ)

• • •

கள்ளிக்கோட்டை:—இந்நகர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 15—11—49 அன்று தோழர் கே. வி. கிருட்டினன் பி. ஏ. பி. எல். தலைமையில் நடைபெற்றது. அதுபோது துவக்க விழா நடத்துவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு, வருவேற்புக் கழகத்தினராகக் கீழ்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்:—கே. வி, கிருட்டினன் பி. ஏ. பி. எல். துணைத்தலைவர்:—ஆர். கோபாலகிருஷ்ணன், செயலாளர்:—வி. என். நாராயணசாமி, பொருள் உறுப்பினர்:—வி. கந்தசாமி. மற்றும் ஒன்பது செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் ஒரு தீர்மானம நிறைவேறப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (செ—ர்)

* * *

பொட்டல்புதூர்:—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம். 16—11—49ல் தோழர் எம். எம். அகமது மைதீன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது நெசவுத் தொழிலாளரிடையே கழகம் இறங்கி வேலை செய்ய வேண்டுமென்றும், தோழர் அண்ணாத்துரை அவர்களின் நெல்லை மாவட்டச் சுற்றுப்பயணத்தின்போது இவ்வூருக்கும் அழைக்க வேண்டுமென்றும தீர்மானிக்கப்பட்டது. தோழர்கள் கே. என். முகம்மது மைதின், ஒ. ஏ. முகமது யூசுப், கே. எம். முகம்மது உமர் ஆகியோர் தீர்மானங்களை ஆதரித்துப் பேசினர். பின்பு தோழர் ஏ. கே. ஏ. சாமி நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ,

உணவைப் பெருக்குகின்றனர்!

சென்னை மாகாண விவசாயிகளுக்குப் பாதி விலையில் பாஸ்பேட் எரு வழங்கிவந்த திட்டத்துக்கு இந்திய சர்க்கார் அளித்துவந்த உதவித் தொகையை நிறுத்திக்கொண்டார்களாகையால், சென்னை சர்க்காரும் இதுவரை விவசாயிகளுக்குத் தந்துவந்த சலுகையை ரத்து செய்துவிடவேண்டியதாயிற்றென விவசாய மந்திரி தோழர் ஏ. பி. ஷெட்டி 21-ந் தேதி மேல்சபையில் தெரிவித்தார். பொருளாதார நெருக்கடி காரணமாகவே இச்சலுகை நிறுத்தப்பட்டதென்றும் குறிப்பிட்டார்,

சந்தா விவரம்

(உள் நாடு)

ஒரு மாத சந்தா	ரூ. 2—0—0
மூன்று மாத சந்தா	ரூ. 6—0—0
ஆறு மாத சந்தா	ரூ. 12—0—0
ஒரு வருட சந்தா	ரூ. 24—0—0

மூன்றுமாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி. பி. மூலம் அனுப்ப இயலாது.

மானேஜர், "மாலை மணி"

(வெளி நாடு)

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா	ரூ. 3—0—0
மூன்று மாத சந்தா	ரூ. 9—0—0
ஆறு மாத சந்தா	ரூ. 18—0—0
ஒரு வருட சந்தா	ரூ. 36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி.பி: மூலம் அனுப்ப இயலாது.

மானேஜர் 'மாலைமணி'

அறிவிப்பு

ரெடிமேட் முட்டை பவுடர், முட்டைப்பூச்சி, தேம்பு முதலியவைகளை நாசமாக்க அபார்ந்த நிதிவை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. மது ஸியாப் முதலியார், மதுரை.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street Madras-1